தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 26
இதழ் 02
ஜீன் 2024

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்




## சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக்கடன் இணைப்பு வழங்குவதில்

# மகளிர் நலம் நாடும் அரசின் மகத்தான சாதனை...!



முனைவர். **ப. செந்தில்குமார்,** இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

சுய உதவிக் குழு மகளிரின் தோழியான முற்றம் இதழின் வாயிலாக மாதந்தோறும் எனது கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

மகளிர் வாழ்வாதாரம் சிறக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் துவக்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் இன்று மிகப்பெரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பது அனைவரும் அறிந்ததுதான். சுய உதவிக் குழு மகளிர் இன்று ஆண்களுக்கு நிகராக பல்வேறு தொழில்களிலும் சாதனைகள் படைத்து வருகின்றனர் என்றால் அது மிகையில்லை.

சுய உதவிக் குழு இயக்கத்தின் வளர்ச்சிக்காக அயராது செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அரசின் திட்டங்களை மாநிலத்தின் கடைக்கோடியில் வசிக்கும் சுய உதவிக் குழு மகளிரையும் சென்றடையச் செய்திடும் உன்னத பணியினை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சுய உதவிக் குழு மகளிரின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறை கொண்டு, அவர்களின் வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத் தேவையை நிறைவு செய்திடும் வகையில் இவ்வாண்டு 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கிட ஆணையிட்டுள்ளார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் தான் செல்லும் இடங்களில் எல்லாம் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் அரங்குகளைப் பார்வையிட்டு வருவதுடன், தனக்கு சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை மட்டுமே அன்பு பரிசாக வழங்கிட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்பது சுய உதவிக் குழுவினருக்கு பெருமை தரும் ஒன்றாகும்.

இச்சிறப்புகள் பல பெற்றுள்ள சுய உதவிக் குழுக்கள் தங்களின் வளர்ச்சிக்காக அரசு செயல்படுத்தும் திட்டங்களை சிறப்பாக பயன்படுத்தி, தங்களை மேலும் மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது பள்ளி, கல்லூரிகளில் ஆண்டுத் தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளன. தேர்வில் வெற்றி பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகள். கல்வி மட்டுமே களவாட முடியாத செல்வம் என்பதைக் கருத்தில் கொண்டு மாணவர்கள் அனைவரும் சிறப்பாக கல்வி கற்று வாழ்வில் வளமடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி... வணக்கம்!!!

அன்புடன்,

(ப. செந்தில்குமார்)



திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

**அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,**

முற்றம் மாத இதழின் வாயிலாக உங்களை சந்தித்து, எனது கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. ஆண்களுக்கு இணையாக இன்று அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தங்களின் முத்திரையைப் பதித்து வருகின்றனர். குறிப்பாக சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் படைத்து வரும் சாதனைகளைப் பட்டியலிட்டால் அது முற்றத்தின் பல பக்கங்களில் இடம் பெறும் என்றால் அது மிகையில்லை.

உங்களின் அயராத முயற்சியையும், நிலையான வளர்ச்சியையும், குறையாத தன்னம்பிக்கையையும் கண்ட மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், “வைக்க வேண்டிய இடத்தில் வைத்து, கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்து, பாதுகாக்க வேண்டிய இடத்தில் பாதுகாக்கும் அமைப்பாக இருப்பதால்தான் இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணம் புழங்கும் இயக்கமாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாறியுள்ளன” என்று பெருமையுடன் உங்களைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

இத்தகு சிறப்பு பெற்ற உங்களின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும்.

தற்போது நீங்கள் உங்கள் பிள்ளைகளின் மேற்படிப்பிற்கு உரிய பள்ளி மற்றும் கல்லூரிகளை தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டிருப்பீர்கள். நல்ல வேலைவாய்ப்பை பெற்றுத்தரும் படிப்புகளிலே தங்கள் பிள்ளைகளை சேர்த்திட பெரும்பான்மையான பெற்றோர்கள் விரும்புவார்கள். அதிக கட்டணம் வாங்கும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்தான் சிறந்தவை என தீர்மானித்து, அவற்றில் தங்கள் பிள்ளைகளை சேர்க்க தங்களின் சக்திக்கு மீறிய அளவில் அபரிமிதமான செலவினையும் செய்திட முன்வருவார்கள். இது மிகவும் கவலைக்குரிய ஒன்றான நிலையாக இன்று உள்ளது. இதை தவிர்த்திட வேண்டும்.

அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் சிறப்பான முறையில் கல்வி கற்பிக்கப்படுகின்றது. அவைகளில் படித்து மருத்துவர்கள், விஞ்ஞானிகள், மாவட்ட ஆட்சியர்கள், காவல் துறை அதிகாரிகள் என பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களும் உள்ளனர். எனவே அரசு பள்ளி, கல்லூரி என்றாலே தரம் குறைந்ததாக இருக்கும் என்ற மனப்பாங்கை கைவிட்டு, அவற்றிலும் தங்களின் பிள்ளைகளை சேர்த்திட நீங்கள் முன்வர வேண்டும்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்ற வாக்கியத்திற்கு ஏற்ற வகையில் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுவினரான நீங்கள் நினைத்தால் எதையும் சாதிப்பீர்கள்.

நன்றி... வணக்கம்.

அன்புடன்,

ஸ்ரேயா

(ஸ்ரேயா பி சிங்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH | Tncdw State
www.Tncdw.org | Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

*அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து*
*இன்புற்றார் எய்து சிறப்பு*

– (குறள்: 75)

உலகில் இன்புற்று வாழ்கின்றவர்க்கு வாய்க்கும் சிறப்பு, அவர் அன்புள்ளம் கொண்டவராக விளங்குவதன் பயனே என்று கூறலாம்.

# உள்ளே...



9 வறுமை ஒழிப்பு செயல்பாடுகள்


15 வணிகம் வளர்க...


12 நான் முதல்வன் திட்டம்


17 முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்


14 பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம்...


34 கொண்டைக்கடலை பிரியாணி


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

# முற்றம்

விலை ரூ. 20/– • மலர் 26 • இதழ் 02 • ஜூன் 2024



கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

திருமதி. **ஸ்ரேயா பி சிங்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
திரு. **எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல் இயக்குநர், VKP
திரு. **பி. மந்திராச்சலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **ஆர். சங்கர்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திரு. **வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **பி. எஸ். விஜயலெஷ்மி** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திரு. **ச. இராஜேந்திரன்,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
திரு. **வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **பி.ஆர்.இ குழுமம்**



தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**‘முற்றம்’**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.


## அமையட்டும் நல்லாட்சி...



அன்புள்ள வாசகர்களுக்கு,

ஆண்டு இறுதி தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ செல்வங்களுக்கும், அவர்களை உருவாக்கிய ஆசிரியப் பெருமக்களுக்கும் முற்றம் தனது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

அரசு பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் 94.56% மாணவர்கள் இந்த ஆண்டு வெற்றி பெற்றிருப்பது பாராட்டிற்குரியது. இந்த பாராட்டுதலுக்குரியவரும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி கண்காணித்து வருபவருமான, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு முற்றம் இதயபூர்வமான நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.


ஐக்கிய நாட்டு சபையின் உதவியுடன், தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களை ஆய்வு செய்ததில் அக்குழு உறுப்பினர்கள் குழுவின் மூலம் பெறுகின்ற கடனில் பெரும்பாலான தொகை (80 சதவிகிதம்) அவர்களின் குழந்தைகளின் கல்விக்காக செலவிடுகின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

வாசகர்கள் இந்த தலையங்கத்தை படிக்கும் வேளையில், இந்திய நாட்டின் 18–வது புதிய மத்திய அரசு அமைந்திருக்கும் என்பது உறுதி. மக்களாட்சி மலர்வதற்கு இத்தேர்தலில் பொறுப்புடன் வாக்களித்த அனைத்து வாக்காளர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

இத்தேர்தலின் மூலம் புதியதாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், நமது நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு, நாட்டிற்கான வளர்ச்சிக்குத் தேவையான நலத் திட்டங்களை வகுப்பதற்கு, உலக நாடுகளில் இந்திய நாட்டின் மதிப்பை உயர்த்துவதற்கு தேவையான கொள்கைகளை வகுப்பார்கள் என மக்கள் ஏக்கத்துடன் எதிர்பார்த்து கொண்டிருக்கின்றனர். மக்களுக்குத் தேவையான சிறப்பு கொள்கைகளை வகுத்தாலும், அந்த கொள்கைகளை செயல் வடிவத்திற்கு கொண்டு வருவதற்கான திட்டங்களையும், அதற்கான வழிகாட்டுதல்களையும் உருவாக்கினாலும், அதை மக்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டியது அவசியம்.

நமது நாட்டில் திட்டங்கள் சிறப்பாக தீட்டப்பட்டாலும் அவற்றை செயல்படுத்துவதில் பல தடைகளும், நடைமுறை சிக்கல்களும் உள்ளன என்பதனை நாம் அனுபவத்தில் காண்கின்றோம். எனவே, திட்டங்களை உருவாக்கும்பொழுது, சமூக விஞ்ஞானிகள், சமூக சிந்தனையாளர்கள், சேவை நிறுவனங்கள், பல்வேறு துறைகளின் களப்பணியில் அனுபவம் மிக்கவர்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் மாணவ பிரதிநிதி கள் ஆகியோர்களின் ஆலோசனைகளைப் பெற்று திட்டங்களை செயல்படுத்தினால் அவைகள் அனைத்து மக்களுக்கும் சென்றடையும் என்பது உறுதி.

இப்படிக்கு,



(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்



### மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில்
### ஊரக வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம்

# கிராமப்புறங்களில் சிறப்பான முன்னேற்றம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சராக திகழ்ந்தபோது கிராமப்புறங்களில் முன்னேற்றத்தில் தனிக்கவனம் செலுத்தி சிறப்பான பல திட்டங்களை செயல்படுத்தினார்கள். இன்று மாண்புமிகு முதலமைச்சராக வீற்றிருக்கும் நிலையில் கிராமங்களின் வளர்ச்சிக்காக சிறப்பான பல திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.

## ஊராட்சி நிர்வாகம்

சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, திட்ட அனுமதி, மனைப்பிரிவு அனுமதி மற்றும் கட்டட அனுமதி போன்ற குடிமக்கள் நலன் சார்ந்த அரசு சேவைகளை மக்கள் இணையதளம் வாயிலாக எளிதில் பெற உதவும் வகையில் ஊராட்சிகளில் மின் ஆளுமைக்கான Vptax Portal நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

கிராமப்புறங்களில் பயனளிக்கும் இத்திட்டத்தின் கீழ் மூன்றாண்டுகளில் பெண்கள் 86.16 சதவீதமும், மாற்றுத் திறனாளிகள் 2,87,461 பேரும் தாழ்த்தப்பட்ட பழங்குடியினரில் 29.59 சதவீதமும் பயன் பெற்றுள்ளனர்.

இத்திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்படுவதன் மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியின் குறிக்கோள்களான பசியின்மை, வறுமையின்மை, பாலின வேறுபாடின்மை ஆகியவை நம் நாட்டில் எய்தப்படும்.

## பெரியார் நினைவு சமத்துவபுரம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 24.6.2021 அன்று சட்டப் பேரவையில் தமிழ்நாட்டில் கட்டப்பட்ட 238 சமத்துவபுரங்களும் சீரமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி, மக்களின் பயன்பாட்டிற்கு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டங்களின் வாயிலாக **2,56,508** மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.**71,960.43** கோடி வங்கிக் கடன்!

**511** முகாம்கள் மூலம் **92,003** இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!!




ஒதுக்கப்படாத 4 சமத்துவபுரங்கள் உட்பட 149 சமத்துவபுரங்களை முதற்கட்டமாக 2021-22ம் ஆண்டில் சீரமைப்பதற்காக ரூ.194.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 98 பணிகள் முடிவுற்று மீதமுள்ள சில பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

மேலும், இரண்டாம் கட்டமாக 2022-2023ம் ஆண்டில் மீதமுள்ள 88 சமத்துவபுரங்களைச் சீரமைக்க ரூ. 67.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் 99 பணிகள் முடிவுற்று மீதமுள்ள சில பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.

### தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் அமைக்கும் பொருட்டு 2021-22-இல் இருந்து இதுவரை 1,44,489 குடும்பங்களுக்கு கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் பிற குடியிருப்புகளில்வசிக்கும்குடும்பங்களுக்குகழிப்பறைகட்டபோதியஇடவசதி இல்லாத காரணத்தினால் அந்தக் குடியிருப்புகளுக்கு இக்காலகட்டத்தில் 2,940 சமுதாய சுகாதார வளாகங்கள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன.

### நம்ம ஊரு சூப்பரு பிரச்சாரம்:

கிராமப்புறங்களில் தூய்மையை வலியுறுத்தும் "நம்ம ஊரு சூப்பரு இயக்கம்" திட்டத்தின் மூலமாக 37 மாவட்டங்களில் ஊரகப் பகுதிகளில் சுமார் 47,339 குப்பை கொட்டும் இடங்கள், 16,829 பொது இடங்கள், 21,775 பள்ளிகள், 22,695 அங்கன்வாடிகள், 45,824 அரசு கட்டிடங்கள் / நிறுவனங்கள், 47,949 கிராமப்புற நீர் நிலைகள், 10,011 சமுதாய சுகாதார வளாகம், 15,69,348 மீட்டர் கழிவுநீர் வடிகால்கள் ஆகியவை சுமார் 14,31,591 பணியாளர்களைக் கொண்டு தீவிர துப்புரவு நடவடிக்கைகளில் பங்கேற்று சுத்தம் செய்யப்பட்டன.

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

ஊரகப் பகுதிகளில் உள்ள 6,40,313 சுய உதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 58,746 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 7.5.2021 முதல் 13.2.2024 வரை சுழல் நிதி ரூ.629.55 கோடி, சமுதாய முதலீட்டு நிதி ரூ.629.55 கோடி நலிவுநிலை குறைப்பு நிதி ரூ.14.59 கோடி சுய

7.5.2021 முதல் 13.2.2024 வரை சுழல் நிதி ரூ.**629.55** கோடி, சமுதாய முதலீட்டு நிதி ரூ.**629.55** கோடி நலிவுநிலை குறைப்பு நிதி ரூ.**14.59** கோடி சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.




உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2,56,508 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடனாக ரூ.71,960.43 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### சிறப்பு சுய உதவிக் குழுக்கள்

சமூக பொருளாதார விளிம்பு நிலையில் வாழ்வோரைக் கண்டறிந்து அவர்களின் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் அவர்களை தேசிய நீரோட்டத்தில் சேர்ப்பதற்காகவும் இதுவரை 37,163 சிறப்பு சுய உதவிக் குழுக்கள் இத்திட்டத்தின் மூலமாக உருவாக்கப்பட்டுள்ளன,

முதியோர், ஊனமுற்றோர், திருநங்கைகள், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் என இதன் மூலம் 3 இலட்சத்து 76 ஆயிரத்து 559 பேர்கள் பயனடைந்துள்ளனர்.

இதுவரை உருவாக்கப்பட்டுள்ள 37,163 சிறப்பு சுய உதவிக் குழுக்களில் 12,348 மாற்றுத் திறனாளிகள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 410.05 கோடி சுழல்நிதியாகவும் மற்றும் 24.09 கோடி ரூபாய் கிராம வறுமை ஒழிப்பு நிதியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு ஆண்டில் 6,800 மாற்றுத்திறனாளி குழுக்களுக்குத் தொழில் துவங்கிடும் நோக்கில் சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து 40.80 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### சுய வேலைவாய்ப்புத் திட்டம் தனிநபர் தொழில்முனைவு (SEP-I)

சுய வேலைவாய்ப்பு தனிநபர் தொழில் முனைவு திட்டத்தின் கீழ் 21,190 தனிநபர்களுக்கு ரூபாய் 117.00 கோடியும், 12,503 குழுக்களுக்கு ரூபாய் 428.82 கோடியும் வட்டி மான்யத்துடன் கூடிய வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புரங்களில் செயல்படும் 1,29,630 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 5,266.21 கோடி வட்டி மானியத்துடன் கூடிய வங்கி கடன் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புரங்களில் செயல்படும் 3,34,763 சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 23,675.15 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு (EST&P)

45,150 நகர்ப்புர ஏழை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, ரூபாய் 89.30 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

511 வேலைவாய்ப்பு முகாம்கள் இளைஞர் திறன் விழாக்கள் ரூ.4.01 கோடி செலவில் மாவட்ட அளவில் நடத்தப்பட்டு 92,003 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

நகர்ப்புரங்களில் செயல்படும் **3,34,763** சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் **23,675.15** கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது

**2021–2022** இல் இருந்து இதுவரை **1,44,489** குடும்பங்களுக்கு கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்

# வறுமை ஒழிப்பு செயல்பாடுகள்

மகளிர் பொருளாதார சுயசார்பு பெற்றிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மற்றும் அதன் துணை அமைப்புகளான தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், தீனதயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவை அயராது செயல்பட்டு வருகின்றன. இந்த அமைப்புகளின் செயல்பாடுகள் குறித்து சுய உதவிக் குழு மகளிரின் தோழியான முற்றம் இதழில் கடந்த இரண்டு மாதங்களாக வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சியை இவ்விதழில் காண்போம் வாருங்கள்...

### தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU - GKY)

தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டம் (DDU - GKY) என்பது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடையே 60:40 என்ற நிதி பகிர்வு முறையை கொண்டு ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களில் உள்ள இளைஞர்களுக்கான திறன் பயிற்சி அளிக்கும் திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கு பல்வேறு துறைகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்ட செயலாக்க முகமைகள் மூலம் பல்வேறு திறன் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு குறைந்தபட்சம் 70 பணியமர்வு அளிக்கப்படுவது இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

பயிற்சிக்குரிய பாடத்திட்டமானது தேசிய திறன் தகுதி கட்டமைப்புடன் (National Skill Qualification Framework – NSQF) இணைந்த ஒன்றாகும். மேலும், தொழில் பாடத்துடன் மென்திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணினி அறிவு ஆகிய பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளதால், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி முடிக்கும் இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கிறது.




### பிரிட்டிஷ் கவுன்சிலுடன் இணைந்து ஆங்கிலம் மற்றும் மென் திறன் பயிற்சி

ஆங்கிலம் மற்றும் மென்திறன் பயிற்சிகள் அனைத்து திட்ட செயலாக்க முகமைகளிலும் ஒரே சீராக பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆங்கிலம் மற்றும் மென் திறன்களுக்கான பாடத்திட்டங்களை தரப்படுத்துதல் எனும் திட்டத்தை துவக்கியுள்ளது. இதற்காக பிரிட்டிஷ் கவுன்சில் தொழில்நுட்ப சேவை நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு புதிய பாடத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறன் மேம்படுத்தப்பட்டு, அவர்களுக்கான வேலை கிடைக்கக் கூடிய சாத்திய கூறுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.




### ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)

கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சியளித்து சுய வேலைவாய்ப்பை உருவாக்கிட ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட முன்னோடி வங்கிகள் வாயிலாக ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் (Rural Self Employment Training Institute – RSETIs) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் துவங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (TNULM)

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது நகர்ப்புர ஏழைகளைக் கொண்டு சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமை மற்றும் நலிவு நிலையை குறைப்பதும், லாபகரமான சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகளை பெறுவதற்கான வழி வகை செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதும் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டான 2014-15 முதல் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டு வந்தது. தமிழ்நாடு அரசு அனைத்து வாழ்வாதார இயக்கங்களையும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்ற ஒரு குடையின் கீழ் கொண்டு வர முடிவு செய்து 2016-17 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் சமூக ஒருங்கிணைப்பு மூலம் ஒட்டுமொத்த நகர்ப்புர ஏழைகள் மற்றும் நலிவடைந்த பிரிவினரை சுய உதவிக்குழு மற்றும் கூட்டமைப்புக்குள் கொண்டு வருவதை வலியுறுத்துகிறது. ஏழை மற்றும் நலிவுற்ற குடும்பங்களில் உள்ள மகளிரை கண்டறிந்து அவர்களை இணைத்து சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன.

நகர்ப்புர ஏழை மற்றும் நலிவடைந்த பிரிவினர், குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள், சிறுபான்மையினர், மகளிரைத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள், விதவைப் பெண்கள், இடம் பெயர்ந்து வந்த தொழிலாளர்கள், மிகவும் நலிவுற்றோர், தெருவோர வியாபாரிகள், குப்பை சேகரிப்பவர்கள், வீட்டு வேலை செய்பவர்கள் மற்றும் கட்டிடத் தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதில் அதீத அக்கறை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.





### சுய உதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புர அளவிலான கூட்டமைப்புகள் அமைத்தல்:

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதிய சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு 3 மாதங்கள் முடிவடைந்த பின்பு சமூக மதிப்பீட்டின் அடிப்படையில் அக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. குறைந்த பட்சம் 10 சுய உதவிக் குழுக்களை குடியிருப்பு பகுதி / வார்டு அளவில் ஒருங்கிணைத்து பகுதி அளவிலான கூட்டமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறது. இக்கூட்டமைப்பின் கீழ் வரும் பகுதி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு பெரிய அளவிலான தலையீடுகள் மற்றும் முன்னெடுப்புகள் தேவைப்படும்போது தீர்வு காண வழிகாட்டும் அமைப்பாகவும் செயல்படுகிறது.

### நகர்ப்புற வாழ்வாதார மையங்கள்

இம்மையங்கள் அனைத்து நகரவாசிகளுக்கும் முறைசாரா துறைகளில் தேவையான சேவைகளை வழங்குவதற்கும், மேலும் நகர்ப்புர ஏழைகள் அவர்களது உற்பத்தி பொருட்கள் மற்றும் சேவைகளை சந்தைப்படுத்துவதற்கும் தேவையான தகவல்கள் மற்றும் பயன்களைப் பெறுவதற்கும் அடித்தளமாக அமைவதுடன் ஓரிட வணிக மையமாகவும் செயல்படுகிறது. நகர்ப்புர வாழ்வாதார மையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் திறன் வளர்ப்புகள் குறித்து உரிய தகவல் தேடுபவர்களுக்கு உதவும் ஆதார வள மையமாகவும் திகழ்கிறது.



### வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம் (EST&P)

நகர்ப்புர ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்கள் சுய தொழில் அல்லது ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பினை பெறுவதற்கான திறனை வளர்ப்பது மற்றும் மேம்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகள் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 30 சதவிகித மகளிர் பயிற்சி பெற வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநகர / நகர பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்கள் தொகையின் எண்ணிக்கைக்கேற்ப பயன் பெறுவர்.

### திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CBT)

நகர்ப்புர ஏழை எளிய மக்களின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு காரணிகளை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதற்கு ஏதுவாக, இத்திட்டத்திலுள்ள அனைத்து மாநில மற்றும் மாவட்ட அலுவலர்கள் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு, கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் தேவையின் அடிப்படையில் விரிவான பயிற்சி வழங்கப்படுகிறது.



### சுய வேலைவாய்ப்புத் திட்டம் – வங்கி இணைப்பு (SEP-BL):

இத்திட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியுடன் தொடர்புகொண்டு இந்திய ரிசர்வ் வங்கி வகுத்த வழிமுறைகளின்படி, வட்டி மானியத்துடன் கூடிய கடன் பெற வழி வகை செய்யப்படுகிறது. முறையாக கடன் திருப்பம் செய்யும்சுயஉதவிக்குழுக்களுக்குவட்டிமானியம் உரிய காலத்தில் வெளிப்படைத்தன்மையுடன் வழங்கிட Paisa Portal என்ற இணையத்தின் மூலம் வழிவகை செய்யப்படுகிறது.




### குழு சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP-G):

ஒரு சுய உதவிக் குழுவில் உள்ள தொழில் முனைவதில் ஆர்வமுள்ள உறுப்பினர்கள் இணைந்தோ அல்லது குழுவாகவோ நகர்ப்புர ஏழைகள் சுயவேலைவாய்ப்பிற்கான சிறுதொழில் துவங்குவதற்கு ரூ.10.00 இலட்சம் வரை வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவதற்கு இத்திட்டத்தின் மூலம் வழிவகை செய்யப்படுகிறது.




### தனிநபர் சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP –I):

தொழில் முனையும் திறன் உள்ள நகர்ப்புர ஏழைகளை கண்டறிந்து, நுண் நிறுவனம் துவங்க ரூ.2.00 இலட்சம் வரை வட்டி மானியத்துடன் கூடிய வங்கிக்கடன் பெறுவதற்கு இத்திட்டத்தின் மூலம் வழி வகை செய்யப்படுகிறது.



### சுய வேலைவாய்ப்புத்திட்டம் (SEP)

நகர்ப்புர தனி நபர் ஏழை மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கு அவரவர் திறன் மற்றும் உள்ளூர் நிலைமைக்கு ஏற்றார்போல் சுய வேலைவாய்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கு நிதியுதவி அளிப்பதை இத்திட்டத்தின் மூலம் வழிவகை செய்கிறது.



தொடரும்...



மாணவர்களையும்,
இளைஞர்களையும்
முதல்வனாக மாற்றுவதே
இத்திட்டத்தின் நோக்கம்

# மாணவச் செல்வங்களின் வளமான வாழ்விற்கு வழிகாட்டும்

# நான் முதல்வன் திட்டம்

பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்வி, வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வையும் வழிகாட்டுதலையும் அளிப்பதே நான் முதல்வன் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இதற்காக https://naanmudhalvan.tnschools.gov.in என்ற இணையதளப் பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில், நாடு முழுவதும் உள்ள படிப்புகள், கல்லூரிகள், நுழைவுத் தேர்வுகள், உதவித் தொகை, கல்விக் கடன் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை குறித்த தகவல்கள் விரிவாக உள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், கடந்த ஆண்டு மார்ச் 1ஆம் தேதி அன்று உயர் கல்வி படிக்க விரும்பும் மாணவர்களுக்காக 'நான் முதல்வன்' என்னும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். மாணவர்களுக்கு குறிப்பாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்வி, வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வையும் வழிகாட்டுதலையும் அளிப்பதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இதில் மாணவர்களுக்கான உதவித் தொகை, நுழைவுத் தேர்வு, கல்விக் கடன் உள்ளிட்ட பிற அத்தியாவசியத் தகவல்களும் இடம் பெற்றுள்ளன.

> மாணவர்களுக்கு குறிப்பாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உயர் கல்வி, வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்வையும் வழிகாட்டுதலையும் அளிப்பதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்

'உலகை வெல்லும் இளைய தமிழகம்' என்ற அடைமொழியுடன், நான் முதல்வன் திட்டத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இது தன்னுடைய கனவுத் திட்டம் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். மாணவர்களையும், இளைஞர்களையும் முதல்வனாக மாற்றுவதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக https://naanmudhalvan.tnschools.gov.in என்ற இணையதளப் பக்கம் உருவாக்கப்பட்டது. இதில், நாடு முழுவதும் உள்ள படிப்புகள், கல்லூரிகள், நுழைவுத் தேர்வுகள், உதவித் தொகை, கல்விக் கடன் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவை குறித்த தகவல்கள் விரிவாக உள்ளன.

மாணவர்கள் எமிஸ் எண் மற்றும் கடவுச் சொல்லை உள்ளிட்டு லாகின் செய்ய வேண்டும். மாணவர்கள் பயன் பெறுவது தவிர்த்து, பெரியவர்கள் வழிகாட்டியாகவும் தன்னார்வலராகவும் செயல்படலாம் என்றும் கல்வித்துறை தெரிவித்துள்ளது.



கலை, அறிவியல், பொறியியல், இதழியல், இசை, நடனம் என ஒவ்வொரு படிப்பு குறித்த சுருக்கமான அறிமுகம், படிப்புக் காலம், அதிலேயே என்னென்ன மேற்படிப்புகள் உள்ளன ? அந்தப் படிப்பு அளிக்கும் பணி வாய்ப்புகள் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அரசுப் பள்ளிகளில் படித்து, அடுத்தடுத்த உயரத்தை எட்டிய மாணவர்களைப் பற்றிய குறிப்புகள் அவர்களின் புகைப்படங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளன. இதைக் கண்டு மாணவர்கள் உத்வேகம் அடையும் வகையில் உள்ளடக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

12ஆம் வகுப்புக்குப் பிறகு மாணவர்கள் என்ன படிக்கலாம்? என்று இந்தப் பகுதியில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதில், பி.எஸ்.சி., தொடங்கி பி.டெக்., எம்.பி.பி.எஸ்., வரை ஏராளமான படிப்புகள் 33 வகையாகப் பிரிக்கப்பட்டு, வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. கலை, அறிவியல், பொறியியல், இதழியல், இசை, நடனம் என ஒவ்வொரு படிப்பு குறித்த சுருக்கமான அறிமுகம், படிப்புக் காலம், அதிலேயே என்னென்ன மேற்படிப்புகள் உள்ளன? அந்தப் படிப்பு அளிக்கும் பணி வாய்ப்புகள் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல படிப்புகளும் தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டு, அதற்கேற்ப கல்லூரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. தனியார் கல்லூரிகள், தனியார் பல்கலைக்கழகங்கள், தன்னாட்சி கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், மத்திய, மாநில அரசுகளின் கீழ் இயங்கும் கல்வி நிறுவனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றையும் மாநில வாரியாக க்ளிக் செய்து, தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஐஐடி உள்ளிட்ட மத்தியக் கல்வி நிறுவனங்களுக்கான பொறியியல் நுழைவுத் தேர்வான ஜேஇஇ,மருத்துவ நுழைவுத் தேர்வான நீட் உள்ளிட்ட 11 வகையான நுழைவுத் தேர்வுகள் குறித்த முழுமையான விவரங்கள் இந்தப் பகுதியில் உள்ளன.

நுழைவுத் தேர்வுகள் குறித்த பகுதியில் பள்ளிப் படிப்புக்குப் பிறகு என்னென்ன நுழைவுத் தேர்வுகள் உள்ளன?, நுழைவுத் தேர்வு குறித்த அறிமுகம், அதை எழுதுவதற்கு என்ன கல்வித் தகுதி தேவை?, தேர்வு முறை எப்படி இருக்கும், சேர்க்கைக்கான காலி இடங்கள், விண்ணப்பக் கட்டணம், விண்ணப்பிக்கும் முறை பற்றி விபரமாக அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோல மாணவர்கள் ஒற்றைச் சாளர முறையில் எளிதாக கல்விக் கடன் பெறுவது குறித்த வழிமுறைகள் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. இங்கு கொடுக்கப்பட்டுள்ள வித்யா லட்சுமி இணைய முகப்பின் வாயிலாக இந்தியாவில் உள்ள எந்த வங்கியிலும் மூன்று படிநிலைகளில் கல்விக் கடன் பெற விண்ணப்பிக்க முடியும்.

பெயர், தொலைபேசி எண், மின்னஞ்சல் ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து, பதிவு செய்ய வேண்டும். தேவையான அனைத்து விவரங்களையும் பதிவு செய்து விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும். இறுதியாக, தேவை மற்றும் தகுதிக்கு ஏற்ப வங்கிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இறுதியாக வேலைவாய்ப்புகள் என்னென்ன என்ற விவரங்களும் நான் முதல்வன் வழிகாட்டி பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இதில், ஒவ்வொரு வேலை குறித்த சிறிய விளக்கம், அதற்குத் தேவைப்படும் கல்வித் தகுதிகள், தேவையான திறன்கள், பணிசார் முன்னேற்றம் மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

11, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நான் முதல்வன் குறித்த வழிகாட்டி புத்தகத்தை, தமிழகப் பள்ளிக் கல்வித்துறை வெளியிடுகிறது. புத்தகத்தை மின்னணு வடிவில் காண https://naanmudhalvan.tnschools.gov.in/assets/Uyar_Kalvi_Vazhikkatti_Book.pdf என்ற இணைப்பை க்ளிக் செய்து பார்க்கலாம்.

நான் முதல்வன் திட்டம் குறித்து முழுமையாக அறிய https://naanmudhalvan.tnschools.gov.in/ என்ற இணைய தளத்தில் பார்க்கலாம்.

# பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம்... சுற்றுச்சூழலைக் காப்போம்...



காலநிலை மாற்றம், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் ஆபத்துகளை உலகமே பேசத் தொடங்கியிருக்கிறது. இவையனைத்தும் சுற்றுச் சூழலை மனிதர்கள் பாழ்படுத்தியதன் விளைவு. இனியும் சுற்றுச் சூழலை கவனிக்காமல் விட்டால் பேரழிவுகள் என்பது தடுக்க முடியாததாகிவிடும் என்கிற நிலையில் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நடவடிக்கைகளை உலக நாடுகள் முன்னெடுக்க தொடங்கியிருக்கின்றன.

ஒரு பிளாஸ்டிக் பை மக்களால் சராசரியாக பயன்படுத்தப்படும் நேரம் வெறும் 20 நிமிடங்கள் மட்டுமே. ஆனால், அவை மட்குவதற்கு எடுத்துக் கொள்ளும் காலம் பலநூறு ஆண்டுகள் ஆகும். அதிகப்படியான இந்த பிளாஸ்டிக் மாசுபாட்டினால் நமது பூமி தீவிரமாக பாதிப்படைந்துள்ளது. மேலும், கடல்வாழ் உயிரினங்கள் உள்பட நமது சுற்றுச்சூழல் அமைப்பில் பேரழிவையும் மற்றும் நமது குழந்தைகளின் ஆரோக்கியத்தில் பாதகமான விளைவுகளையும் இந்த பிளாஸ்டிக் மாசுபாடு ஏற்படுத்தி வருகிறது.

உலகமயமாக்கலுக்கு முன்பு இன்று நாம் நாகரிகம் என்று சொல்கிற வாழ்க்கை முறைகள் எதுவும் இல்லாத காலகட்டத்தில் எல்லாவற்றுக்கும் நாம் பயன்படுத்தியது துணிப்பைகள் தான். கடைக்கு பொருட்கள் வாங்குவதிலிருந்து, பள்ளிக்கூடத்துக்கு புத்தகம் எடுத்துச் செல்வது, வியாபாரிகள் பணம் எடுத்துசெல்வது என அனைத்துக்குமே துணிப்பைகள் தான். ஆனால் நாளடைவில் பிளாஸ்டிக் பைகள் வர ஆரம்பித்ததும் அனைத்துக்கும் அவற்றைப் பயன்படுத்த ஆரம்பித்தோம்.

இன்று சில நிமிடங்கள் மட்டுமே பயன்படுத்தி தூக்கி எறிந்த பிளாஸ்டிக் பொருட்கள் அனைத்தும் சுற்றுச்சூழலுக்கும், மனிதகுலத்துக்கும், உயிரினங்களுக்கும் தீங்காக மாறியிருக்கிறது. மட்குவதற்கு பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும் இந்த பிளாஸ்டிக் உலகம் முழுவதும் அழிக்க முடியாத குப்பைகளாகக் குவிந்து கிடக்கிறது. இதனால் மண், நீர், காற்று என அனைத்து சுற்றுச்சூழலும் மாசுபட்டு உயிரினங்கள், கடல்வாழ் உயிர்கள் அனைத்துக்கும் பாதிப்பு உண்டாக்கி மனிதர்களுக்கும் ஆபத்தை விளைவித்திருக்கிறது.

> ஒரு பிளாஸ்டிக் பை மக்களால் சராசரியாக பயன்படுத்தப்படும் நேரம் வெறும் 20 நிமிடங்கள் மட்டுமே. ஆனால், அவை மட்குவதற்கு எடுத்துக் கொள்ளும் காலம் பலநூறு ஆண்டுகள் ஆகும்.

எனவே சுற்றுச்சூழலையும், உயிரினங்களையும் பாதுகாக்கும் பொருட்டு பிளாஸ்டிக்கை முற்றிலுமாகத் தவிர்க்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கல்வி நிலையங்கள், தொழில் துறையினர், பொதுமக்கள் அனைவரும் பிளாஸ்டிக்கை தவிர்த்து துணிப்பைகள், சணல்பைகள் அல்லது மாற்றுப் பொருட்களை பயன்படுத்தினால் சுற்றுச்சூழலினை எதிர்வரும் தலைமுறைக்கு பாதுகாவலனாக அமைத்திடலாம்.

பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக தேங்காய் நார், தேங்காய் சிரட்டை, வாழை இலை, வாழை நார் உள்ளிட்டவற்றிலிருந்து செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாப்பது நம் அனைவரது கடமையாகும்.

# விருதுநகர் மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



### சிறு தானிய தின்பண்டங்கள்

குறிஞ்சி மலர் மகளிர்
சுய உதவிக் குழு,
விருதுநகர் மாவட்டம்.
கைபேசி : 96592 29827



### கடலை மிட்டாய்

தாமரை மகளிர் சுய உதவிக் குழு
விருதுநகர் மாவட்டம்.
கைபேசி : 97904 25529



### தேன், உலர் பழங்கள், பாதாம், முந்திரி, குல்கந்து

ஓம்சக்தி விநாயகா மகளிர்
சுய உதவிக் குழு
விருதுநகர் மாவட்டம்.
கைபேசி : 94442 39865



### பால்கோவா

நட்சத்திரம் மகளிர் சுய உதவிக் குழு
விருதுநகர் மாவட்டம்.
கைபேசி : 84891 09004



### காரா சேவு வகைகள்

அன்னை இந்திரா மகளிர்
சுய உதவிக் குழு
விருதுநகர் மாவட்டம்.
கைபேசி : 90439 60406

# பெண்களைக் கேலி செய்தல் தடை சட்டம், 1998



1998ம் ஆண்டு, சென்னையில் உள்ள ஒரு பெண்கள் கல்லூரியில் பயின்று வந்த சரிகா ஷா என்ற மாணவி, கல்லூரியின் அருகிலேயே வாலிபர்கள் சிலரால் ஈவ் டீசிங் செய்யப்பட்டு உயிரை விட்டார். இதன் பிறகே 'ஒயிட் ப்ரிகேட்' என்கிற பெண்கள் காவல் படையின் கண்காணிப்பு, புகார் பெட்டிகள் உள்பட பாதுகாப்பு வளையம் உருவாக்கப்பட்டது. தன் பிறந்த நாளான ஜுலை 23 அன்றே, ஈவ் டீசிங் கொடுமையால் உயிரை இழந்த சரிகா ஷாவின் மரணம் மிகப்பெரிய அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது. அதன் விளைவாக Tamil Nadu Prohibition of Eve Teasing act 1998 என்ற சட்டம் உருவானது.

### விளக்கமும் – தண்டனையும்

2002ம் ஆண்டு சட்டத் திருத்தத்தின்படி ஈவ் டீசிங் என்ற வார்த்தைக்குப் பதிலாக Harassment of Women என்று மாற்றப்பட்டது. வன்கொடுமை என்பதற்கு இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம், 'ஒரு ஆணின் முறை தவறிய நடத்தை அல்லது செயலால் ஒரு பெண்ணுக்கு அச்சமோ, பயமோ, அவமானமோ, தொல்லையோ, வேறு ஏதாவது உடல்ரீதியான தாக்குதலோ ஏற்படுதல்' என்பதாகும். இச்சட்டத்தின் கீழ் இவ்வாறான செயல்களை ஒரு பெண்ணுக்குச் செய்யத் தூண்டுவதோ, அந்தத் தவறை விளைவிப்பதோ, மேலும் கல்வி வளாகத்திலோ, கோயில் போன்ற வழிபாட்டுத் தலத்திலோ, பேருந்து நிறுத்தத்திலோ, புகைவண்டி நிலையத்திலோ, சாலையிலோ, திரையரங்கிலோ, பூங்காக்கள், கடற்கரை, திருவிழாக்கள் போன்ற பொதுமக்கள் கூடும் இடங்களிலோ, பேருந்து ரயில் போன்ற பொது ஊர்தியிலோ மேற்கூறிய தவறுகளை செய்யும் ஆண்களுக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையோ, 10 ஆயிரம் ரூபாய் அபராதமோ விதிக்கப்படலாம்.

சில வேளைகளில் இத்தகைய வன்கொடுமையில் ஈடுபடும் ஆண், அந்தப் பெண்ணுக்கு மரணம் சம்பவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வன்கொடுமையில் ஈடுபடும் பட்சத்தில் அவருக்கு ஆயுட்காலம் வரை சிறைத் தண்டனை மற்றும் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்படலாம்.

ஒரு ஆண் தன்னுடைய வன்கொடுமையால் ஒரு பெண்ணுக்கு மரணம் ஏற்படும் என்று அறிந்திருந்தும், உயிர் கொல்லும் எண்ணத்தில் செயல்படும் பட்சத்தில் 10 ஆண்டு சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படலாம்.

எந்தவிதத் தவறான எண்ணமும் இல்லாமல் ஒரு ஆணின் வன்கொடுமையால் ஒரு பெண்ணுக்கு மரணம் சம்பவிக்கும் பட்சத்தில் 10 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூ.25 ஆயிரம் அபராதமோ விதிக்கப்படலாம்.

இந்த வன்கொடுமையால் ஒரு பெண் தற்கொலை செய்துகொள்ளும் பட்சத்தில் அந்த வன்கொடுமையை செய்த ஆணுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூ.50 ஆயிரம் அபராதமும் விதிக்க சட்டம் வழிவகை செய்துள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள், திரையரங்குகள் போன்றவை பெண்கள் மீதான வன்கொடுமை ஏற்படுவதை தடுப்பதற்கான உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும். அதனை மீறி ஒரு பெண்ணுக்கு பொது இடங்களில் இவ்வாறான வன்கொடுமை ஏற்படும்போது, இந்த இடங்களின் பொறுப்பாளருக்கு அல்லது மேலாளருக்கு தெரிய வரும்போது அருகில் உள்ள காவல் நிலையத்துக்குத் தகவல் கொடுத்து உரிய நடவடிக்கை எடுக்க அந்தப் பெண்ணுக்கு உதவ வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் தவறு இழைப்பவருக்கு ரூ. 2 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும்.

பேருந்து போன்ற பொதுமக்களுக்கான ஊர்திகளில் இந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நடைபெற்றால் அந்தச் செயல் அந்த ஓட்டுனருக்கும் நடத்துனருக்கும் தெரியவரும் பட்சத்தில், அந்த வாகனத்தை அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு ஓட்டிச் சென்று, புகார் கொடுத்து அந்தப் பெண்ணிற்கு உதவ வேண்டும்.

ஒருவேளை பொதுமக்களுக்கான வாகனத்தில் பெண்ணுக்கு எதிரான வன்கொடுமை ஏற்படும் பட்சத்தில், காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்காத பட்சத்தில் அந்த ஊர்தியின் ஓட்டுநரும் இந்த வன்செயலுக்கு உடந்தையாக இருந்தார் என்று இந்தச் சட்டத்தின்கீழ் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.5 ஆயிரம் அபராதமும் விதிக்கப்படலாம். அந்த வாகனத்தை பறிமுதல் செய்யவும் சட்டத்தில் வழிசெய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையை பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடாகக் கொடுக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பிட்ட சட்டத்தால் பொதுவாக இருக்கும் சட்டத்துக்கு எந்தவித பங்கமும் கிடையாது. பொதுச்சட்டத்துடன் இணைந்தே செயல்படுத்தப்படும்.




# முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்

## இலக்கு மக்களை அடையாளம் காணும் முறைக்கான பயிற்சி

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்திற்கு இலக்கு மக்களை அடையாளம் காணும் முறை குறித்து பயிற்சி மாநில அளவில் 22.05.2024 மற்றும் 23.05.2024 ஆகிய இரண்டு நாட்கள் செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் (SIRD) பயிற்சி அரங்கில் நடைபெற்றது. இப்பயிற்சியில் ஊரகப் பகுதிகள் சார்பாக தர்மபுரி, கரூர், சேலம், திருவண்ணாமலை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள், நகர்ப்புரபகுதிகள் சார்பாக சென்னை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார மேலாளர்கள் மற்றும் சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொ) / செயல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப., அவர்கள் பயிற்சியினை துவக்கி வைத்து, முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் சிறப்பம்சம், இலக்குமக்களை அடையாளம் காணும் செயல்பாட்டின் அணுகுமுறை, பரீட்சார்த்தமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகள், மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் பொறுப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.








அடுத்தகட்டமாக ஊரகம், நகர்ப்புரம் இரண்டு அணிகளாக பிரிந்து, மக்கள்நிலை ஆய்வு (PIP) குறித்து ஊரகப் பகுதி மாவட்டங்களுக்கும், இலக்கு மக்களைக் கண்டறிவதற்கான கணக்கெடுப்பு குறித்து நகர்ப்புர மாவட்டங்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஊரகப்பகுதியில் மக்கள் நிலை ஆய்வு களப்பணி மேற்கொள்ள செங்கல்பட்டு மாவட்டம், செட்டிப்புண்ணியம் ஊராட்சியிலும், நகர்ப்புரப் பகுதியில் கணக்கெடுப்பு மேற்கொள்ள செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட சாஸ்திரி நகர், ராமபாளையம், கேவெஞ்சர்ஸ் காலனி, ரயில்நிலையம் மற்றும் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் களப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் நிலை ஆய்வின் போது ஊரினை சுற்றிப் பார்த்து அறிதல், சமூக வரைபடம் வரைதல், பொருளாதார நிலை ஆய்வு போன்றவை களத்தில் நேரடியாக செய்து பார்த்து விளக்கமளிக்கப்பட்டது. நகர்ப்புர பகுதியில் கணக்கெடுப்புப் பணி மேற்கொண்டு கணக்கெடுப்புப் படிவம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

கள ஆய்வின் மூலம் பெற்றபடிப்பினை மூலமாக வரைவு செயல் திட்டம் தீட்டப்பட்டு, மாவட்டம் வாரியாக திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் இதர அலுவலர்கள் இலக்குமக்கள் அடையாளம் காணும் செயல் முறை குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

இப்பயிற்சியில், செங்கல்பட்டு மாவட்ட கூடுதல் ஆட்சியர் (ஊரக வளர்ச்சி) செல்வி. ஆர்.அனாமிகா, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் அனைத்து கூடுதல் முதன்மை செயல் அலுவலர்கள், தொடர்புடைய மாவட்ட திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு) அவர்களும், கூடுதல் இயக்குநர் (தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்) அவர்களும் ஒருங்கிணைத்தனர்.







# தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மை செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., அவர்கள் தருமபுரி மாவட்டத்தில்ஊரகவளர்ச்சிதுறையின்செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின்போது, நல்லம்பள்ளி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வட்டார இயக்க மேலாண்மை அலகு அலுவலகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு திட்டப் பணியாளர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தி திட்ட செயல்பாடுகள் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கி.சாந்தி, இ.ஆ.ப,.அவர்கள், ஊரக வளர்ச்சி துறை கூடுதல் இயக்குநர் திருமதி ராஜஸ்ரீ அவர்கள், மகளிர் திட்ட இயக்குநர் திரு. சா. பத்ஹுு முகம்மது நசீர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார இயக்க மேலாளர், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆய்வின்பொழுது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மை செயலாளர் அவர்கள்,

- சுய உதவிக் குழுக்களுக்கு வாரம் ஒரு முறை மதிப்பீடு செய்து வங்கி இணைப்பு பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்;
- 2023-2024 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் சுழல் நிதி பெற்றிருப்பதை உறுதி செய்ய வேண்டும்;
- வங்கி இணைப்பு பெற வழங்கப்பட்ட இலக்குகளை மாதம் மாதம் முன்னேற்ற அறிக்கையாக மாவட்ட அலுவலகத்திற்கு வழங்க வேண்டும்;
- PMAY வீடு கட்டும் பயனாளிகள் சுய உதவி குழுவில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் அவர்களுக்கு நிதி இணைப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்;
- திட்டம் சார்ந்த அனைத்து பயிற்சிகளையும் முறையாக நடப்பதை ஆவணப்படுத்த வேண்டும்;
- MGNRGES திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட பணிக்கூடம், காளான் வளர்ப்பு கூடம், பட்டு வளர்ப்பு கூடம் ஒப்படைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் முறையாக செயல்படுவதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்;
- பிற துறைகள் மூலமாக தொழில் கடன் பெற்று தொழில் முனைவோர்களை உருவாக்க வேண்டும்;



முற்றம் மாத இதழ் அனைத்து சுய உதவி குழுக்களுக்கும் சென்றடைய ஏற்பாடு செய்ய வேண்டும்.

- வட்டார, ஊராட்சி அலுவலக வளாகத்தில் மரக்கன்றுகளை பணியாளர்கள் மூலம் நட்டுப் பராமரிக்க வேண்டும் மற்றும் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகங்கள் மற்றும் வட்டார இயக்க மேலாண்மை அலுவலகங்கள் அனைத்து பணி நாட்களிலும் திறந்திருக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.



### தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும்

# சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான மற்றும் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் போன்றவற்றின் செயல்பாடுகள் மற்றும் அவற்றின் அனைத்து வரவு செலவு குறித்த கணக்குப் பதிவேடுகளை உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் புத்தகப் பராமரிப்பாளர்கள் ஆகியோரைக் கொண்டு முறைப்படி ஆய்வு செய்து, முறையாக உள் தணிக்கை செய்திட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக அறிவுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பொது மேலாளர் திருமதி. பி. எஸ். விஜயலட்சுமி அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மாநில அரசுசாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆதார மையத்தின் (TNVRC) முதுநிலை திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. சொ. ஸ்ரீனிவாசன் அவர்கள் கள ஆய்வு மேற்கொண்டு, 09.05.2024 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் செயல்படும் ஸ்ரீ காளிகாம்பாள் சுய உதவிக் குழு, சின்னமணலி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் திருவள்ளூர் வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவையும், 20.05.2024 அன்று திருவண்ணாமலை மாவட்டம் கஸ்தம்பாடி தீபம் சுய உதவிக் குழு, கஸ்தம்பாடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் திருவண்ணாமலை வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டதுடன், அவற்றின் உள் தணிக்கை செயல்முறைகளை ஆய்வு செய்தனர். மேலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகத்தில் செயல்படும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் பார்வையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து 24.05.2024 அன்று புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும் மல்லிகை சுய உதவிக் குழு, அரசம்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, அன்னவாசல் வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகள் பார்வையிடப்பட்டு, உள் தணிக்கை செயல்முறைகள் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில், சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் சங்க பதிவு புதுப்பித்தல், நிர்வாகிகளை சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்படுதல், முறையாகக் கூட்டங்கள் நடைபெறுதல், அனைத்து பதிவேடுகளையும் முறையாகப் பராமரித்தல் போன்றவற்றை மேற்கொள்ளும்போது ஏற்படும் நன்மைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.






தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

# காளான் வளர்ப்பால் கிடைத்த வாழ்வாதாரம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் தாலுகா, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், குடுமியான்மலை கிராமத்தில் தாய் தமிழ் மகளிர் சுய உதவிக்குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தங்கள் குழுவின் வெற்றி குறித்து அக்குழுவின் உறுப்பினர்கள் கூறுவதை கேட்போம் வாருங்கள்.

“எங்கள் தாய் தமிழ் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள 13 நபர்களும் குழுவின் பெயரில் வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி மாதந்தோறும் கணிசமான தொகையினை சேமித்து வந்தோம். எங்கள் குழுவினைத் தொடங்கியபோது குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் எவ்வித தொழில் நடவடிக்கையிலும் ஈடுபடாமல் எங்களது வீட்டு வேலைகளை மட்டும் பார்த்து வந்தோம். அன்றாட வீட்டுச்செலவு மற்றும் பிள்ளைகளின் கல்விச் செலவினம் போன்ற அனைத்து செலவினத்திற்கும் எங்கள் கணவரின் வருமானத்தை மட்டும் நம்பி எங்கள் வாழ்க்கை இருந்தது. இந்நிலையில் ஒவ்வொரு மாதமும் குழுக் கூட்டம் நடத்தி வந்தோம். அக்கூட்டத்தில் எங்கள் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும், ஏதேனும் ஒரு சுய தொழில் செய்து, தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி முன்னேற வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.

அதன் முதற்கட்டமாக எங்கள் குழுவில் உள்ள அனைவரும் சேர்ந்து தொழில் தொடங்க முடிவெடுத்து, குடுமியான் மலையில் செயல்படும் விவசாய கல்லூரியில் காளான் வளர்ப்பு பயிற்சி பெற்றோம். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையும், மகளிர் திட்டமும் இணைந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் வாயிலாக காளான் கூடம் அமைத்து கொடுத்தார்கள். அதன் பின்பு குழுவில் உள்ள சேமிப்பு தொகையில் உள் கடன் பெற்று அதை மூலதனமாகக் கொண்டு காளான் வளர்ப்புத் தொழில் செய்யத் தொடங்கினோம்.

தற்போது சிப்பி மற்றும் பால் காளான் வளர்ப்புத் தொழிலில் சிறந்து விளங்கும் நிலை உருவாகி எங்களது வாழ்வாதாரம் முன்னேற்றம் பெற்றுள்ளது. உற்பத்தியாகும் காளான்களை ¼ கிலோ, ½ கிலோ மற்றும் 1 கிலோ அளவில் பேக்கிங் செய்து உள்ளூர் மற்றும் வெளியூர்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கிறோம். இதனால் எங்களுக்கு செலவினம் போக, மாதம் ஒன்றுக்கு 20,000/- வரை வருமானம் கிடைக்கின்றது. இதனால் எங்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் என நம்பிக்கை வந்துள்ளது. எங்களின் அன்றாட செலவிற்கும் மற்றும் எங்களின் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கும் எங்களின் வருவாய் உதவியாக உள்ளது.

எங்களுக்கு தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று தாய் தமிழ் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றனர்.





# பால் மதிப்புக்கூட்டல் பிசினஸ்... மாதம் ரூ.50,000 லாபம்...

## சாதித்துக் காட்டிய கிராமத்து தேவதைகள்!

"சின்னச்சின்ன செலவுகளுக்குக்கூட வீட்டுல காசு கேட்கத் தயங்கி, ஆசைகளை அடக்கி வெச்சுக்கிட்ட காலமெல்லாம் எங்க வாழ்க்கையிலும் இருந்துச்சு. ஆனா, சூழல் இப்போ மாறியிருக்கு. வீட்டுக்கான அடிப்படைத் தேவைகளை நாங்க பூர்த்தி பண்றோம். பிள்ளைகளோட படிப்பு செலவுகளுக்கு உதவுறோம். சுய சம்பாத்தியம், வாழ்க்கையை சந்தோஷமா மாத்தியிருக்கு. 'கிராமத்துல இருந்துகிட்டு என்ன சம்பாதிக்க முடியும்'னு கேட்டவங்களுக்கு கிராமத்துலேருந்தும் சம்பாதிக்க முடியும்ங்கிறதை நிரூபிச்சிருக்கோம்" - பெருமிதம் பொங்கப் பேசுகிறார் ராசாத்தி.

கள்ளக்குறிச்சி மாவட்டம் அனுமனந்தல் கிராமத்தைச் சேர்ந்தவர் ராசாத்தி. சிந்து நதி மகளிர் சுய உதவிக்குழு பெண்களுடன் இணைந்து பால் மற்றும் பாலை மதிப்புக் கூட்டல் செய்து விற்பனை செய்துவருகிறார்.



தங்களின் வெற்றிக்கதையைப் பகிர்ந்தபடி பேச ஆரம்பித்தனர் குழுப் பெண்கள்.

"நாங்க 20 பேரும் ஒண்ணா சேர்ந்து 2010-ல் மகளிர் குழுவை ஆரம்பிச்சோம். ஆரம்பத்துல பணத்தைக் கொடுக்கல் வாங்கல் பண்ணி குழுவுக்காகப் பணத்தைச் சேர்த்தோம். 20 பேரும் மாசம் 500 ரூபாய் கொடுப்போம். அந்தக் காசை யாராவது ஒருத்தர் வட்டிக்கு எடுப்பாங்க. அந்த வகையில ரெண்டாவது மாசம் எங்ககிட்ட 20,500 ரூபாய் இருந்துச்சு. அதை குழு பணமா மாத்தினோம். அசலும் வட்டியுமா சேர்ந்து அஞ்சு வருஷத்துல எங்க கிட்ட 10 லட்ச ரூபாய் இருந்துச்சு. அதை முதலீடு பண்ணி குழு உறுப்பினர்கள் எல்லாரும் சேர்ந்து தொழில் தொடங்கலாம்னு முடிவு பண்ணோம்.

எங்க கிராமத்துல மாடு வளர்ப்புதான் பிரதான தொழில். அதனால பால் வியாபாரம் பண்ண ஆரம்பிச்சோம். அக்கம்பக்கத்துக் குழு பெண்கள் மூலமா 40 கறவை மாடுகளை இணைச்சு, தினமும் 200 லிட்டர் பால் சப்ளை பண்ண முடிஞ்சுது. ஆனா, கிராமத்துல பாலுக்கான தேவை பெருசா இல்லை. அப்பதான் ஆவின் நிறுவனத்துக்கு பால் விநியோகம் பண்ண அரசாங்க உதவி கிடைச்சது. காலையில ஆறு மணிக்கு பால் கறப்போம். அது ஆவின் நிறுவனத்துல டெஸ்ட்டுக்கு போக முன்னபின்ன நேரம் எடுக்கும். அதனால பால் திரிஞ்சு போயிரும். அப்படி ஒருநாள் 100 லிட்டர் பால்கூட நஷ்டம்



ஆகியிருக்கு. தொடர் நஷ்டம் ஒரு பிரச்னை யாவே இருந்தது. வாடிக்கையாளர்களுக்கு நேரடியா பால் விற்பனை பண்ணா உடனே காசு கிடைக்கும். ஆனா, நிறுவனத்துக்கு விநியோகம் பண்ணும்போது, காசு உடனே கிடைக்காது. ஒரு வாரம், பத்து நாள் ஆகும். அன்றாட பொழப்புக்கு பணம் வேணும்ங் கிறதால நிறைய பேர் பால் விநியோகம் பிசினஸ்லேருந்து விலகிட்டாங்க. தொடர்ந்து அந்த பிசினஸை எங்களால நடத்த முடியல" என்று ராசாத்தி முடிக்க, குழுவின் ஊக்குநர் பாரதி தொடர்கிறார்.

"அரசாங்கத்துலேருந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கின பயிற்சி வகுப்புகளுக்குப் போனோம். அப்போதான் பால் பொருள்களை மதிப்புக்கூட்டல் பண்ற பிசினஸ் ஐடியா கிடைச்சுது. குழு பணத்தை எடுத்து பிசினஸ்ல முதலீடு பண்ண எல்லாரும் சம்மதிச்சாங்க. தேவையான கருவிகளை குழு பணத்துலேருந்து வாங்கினோம்.

எங்க மூணு பேர் வீடுகள்ல மாடுகள் இருக்கு. கூடுதலா சில விவசாயிகள்கிட்ட இருந்து பால் வாங்கி தயிர், பால்கோவா, நெய் தயாரிக்கிறோம். தினமும் 50 லிட்டர் பால் வாங்குறோம். பத்து லிட்டரை பாலாகவே விற்கறோம். ஒரு லிட்டர் பால் 38 ரூபாய்னு வாங்கி 44 ரூபாய் வரை விற்கிறோம். மீதி 40 லிட்டர் பாலை மெஷின்ல சேர்த்து கொழுப்பை தனியா பிரிச்சு எடுத்து வெண்ணெய் தயாரிக்கப் பயன்படுத்துவோம். 40 லிட்டர் பாலில் கொழுப்பு எடுத்ததுபோக மீதி 25 லிட்டர் பாலும் 4 லிட்டர் கொழுப்பும் கிடைக்கும். பாலை தயிரா மாற்றி ஒரு லிட்டர் தயிர் 50 ரூபாய்னு விற்கறோம். அதே மாதிரி 4 லிட்டர் கொழுப்பை உருக்குனா ஒன்றரை லிட்டர் நெய் கிடைக்கும். ஒரு லிட்டர் நெய் 800 ரூபாய்க்கு விற்கறோம். தவிர, 100 கிராம் பால்கோவா 50 ரூபாய்க்கு விற்கறோம்.

ஒரு மாசத்துக்கு அம்பதாயிரம் வரை லாபம் எடுக்குறோம். பாலுக்கு நல்ல விலையும், உடனுக்குடனே பணமும் கிடைக்கிறதால, இப்போ நிறைய விவசாயிகள் பாலை எங்க கிட்ட கொடுக்க ஆர்வம் காட்டுறாங்க. இன்னும் சில விவசாயிகளோட கைகோத்து, பால் மதிப்புக்கூட்டல் பிசினஸை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தணும்ங்கிறதுதான் எங்க ஆசை..." விடைகொடுப்போரின் வார்த்தை களில் அவ்வளவு நம்பிக்கை.

நன்றி! அவள் விகடன்
04:06:2024

# பேப்பர் பைகளால் கிடைத்த வாழ்வாதாரம்

கடலூர் மாவட்டம், உச்சிமேடு ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஐஸ்வர்யம் மகளிர் சுய உதவிக் குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் உறுப்பினர்கள் எந்த வேலைக்கும் செல்லாமல், எவ்வித வருவாயுமின்றி, வறுமையான சூழலில் வசித்து வந்தனர். இந்நிலையில், இக்குழுவிற்கு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிலிருந்து சமுதாய முதலீட்டு நிதியாக ரூ. 50,000/- வழங்கப்பட்டது. அந்தத் தொகையை முதலீடாக வைத்து கடந்த 2 ஆண்டுகளாக பேப்பர் பை செய்யும் தொழிலை ஐஸ்வர்யம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் செய்து வருகின்றனர். இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 42,000/- வரை இக்குழுவிற்கு லாபம் கிடைக்கிறது. தற்போது இக்குழுவின் உறுப்பினர்கள் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் மூலம் பெருங்கடன் பெற்று அதன் மூலம் பல்வேறு தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிகள் எடுத்து வருகின்றனர். தங்களின் வாழ்வாதாரத்தை வளமாக்கிய மகளிர் திட்டத்திற்கு இக்குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



# வாழ்வை ஒளிரச் செய்த வாழ்வாதார இயக்கம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஒன்றியம், உசிலம்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் எனது பெயர் செல்வி. எங்கள் பகுதியில் செயல்படும் அலையோசை சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள நான், LED BULB செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். சிறிய அளவில் தொழிலை செய்து வந்த நான், எனது தொழிலை மேம்படுத்த கடனுதவி கோரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் விண்ணப்பம் அளித்தேன். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் உசிலம்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் எனக்கு ரூ.10,000/- கடனாக வழங்கப்பட்டது. இந்தத் தொகையை வைத்து, LED BULB செய்வதற்கான மூலப்பொருட்களை வாங்கி, அதிக அளவில் LED BULB களைத் தயாரித்து, விற்பனை செய்வதன் மூலம் எனக்கு மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்கிறது.

எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்திய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– செல்வி, அலையோசை சுய உதவிக் குழு,
உசிலம்பட்டி ஊராட்சி, திருச்சிராப்பள்ளி



## மகளிர் வாழ்வாதாரம் தொடர்பான

# வாய்ப்புகள், நலத்திட்டங்கள், நிதி உதவிகள்

**மற்றும் ஊரக நகர்ப்புர இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகள் குறித்த வழிகாட்டுதல்கள் பெறவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் மற்றும் புகார்கள் தெரிவிக்கவும் கீழ்கண்ட தொலைபேசி எண்ணை அழைக்கவும்.**

**வாழ்வாதார உதவி அழைப்பு எண்**

# 155 330

**LIVELIHOOD HELPLINE NUMBER**

அனைத்து வேலை நாட்களிலும், காலை 09.30 மணி முதல் மாலை 06.30 மணிவரை தொடர்பு கொள்ளலாம்.




**தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்**

அன்னை தெரசா மகளிர் வளாகம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034 | 044-28173415, ddugkytn2016@gmail.com

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்

# மணிமேகலை விருது பெற்ற வெண்மை மகளிர் சுய உதவிக் குழு

காஞ்சிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அமைக்கப்பட்டுள்ள வெண்மை மகளிர் சுய உதவிக்குழுவானது சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழு ஆரம்பிக்கப்பட்டபோது, இக்குழுவின் உறுப்பினர்கள் கழிவு பட்டு நூலினைக் கொண்டு, பட்டு மாலைகள் செய்யும் தொழில் செய்து வந்தனர். இந்தக் குழுவின் உறுப்பினர்கள் தங்கள் பகுதிக்கு வேண்டிய சாலை வசதிகள், குப்பைத் தொட்டிகள், தெரு விளக்குகள் போன்றவற்றை நகராட்சியில் கேட்டு அனைத்து வசதிகளையும் தாங்களே நிறைவேற்றிக் கொண்டு வந்துள்ளனர். இக்குழுவானது பல்லவர் மேடு குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயல்பட்டு வருகிறது.

மேலும் சுகாதார கழிப்பறையை தங்கள் பகுதியில் அமைத்து 15 வருட காலமாக சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து நாற்காலிகள் வாடகைக்கு விடும் பணியினையும், பாக்குமரத்தட்டுகள் தயாரிக்கும் தொழிலையும் செய்து வந்தனர்.

தற்பொழுது இக்குழுவினர் பண்டிகை மற்றும் இல்ல விழாக்கள் போன்றவற்றின் போது உண்ணக் கூடிய தின்பண்டங்களான சோமாஸ், முறுக்கு, அதிரசம், கடலை உருண்டை மற்றும் சில தின்பண்டங்களை தங்களது இல்லத்திலேயே சுத்தமான முறையில், குழு உறுப்பினர்களை கொண்டு தயாரித்து செய்து குறைவான விலையில் நேரடியாகவும், கடைகள் மூலமாகவும் விற்பனை செய்து வருகின்றனர். மேலும் வெளிமாவட்டங்கள், மாநிலங்கள் மற்றும் சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கின்றனர்.

இக்குழுவினர் சிறு தொழில் முனைவோராக பதிவு பெற்று அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் பொருட்களை முறையாக உற்பத்தி செய்வது எவ்வாறு என்பதனை அனுபவத்தின் மூலம் நன்கு அறிந்துள்ளனர் என்பதால், இப்பணியில் ஈடுபடும் குழு உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது. இதனால் அவர்களின் பொருளாதார சூழ்நிலையும் மேம்பாடு அடைந்துள்ளது. வெண்மை மகளிர் சுய உதவிக் குழுவினர் மாவட்ட மற்றும் மாநில அளவில் மணிமேகலை விருதும் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் நகர்ப்புர வாழ்வாதார மையத்தின் மூலம் PMFME திட்ட உதவி பெற்றுத் தரப்பட்டது. மற்றும் முறுக்கு தயாரிக்கும் இயந்திரம் பெறப்பட்டு இக்குழு மேலும் சிறப்பாக செயல்பட உதவிகரமாக உள்ளது.

தங்களின் வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு வெண்மை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.





# பேட்டை சுண்ணாம்புக்காரத் தெரு மகளிர் சுய உதவிக்குழு

நாமக்கல் நகராட்சியில் 13-வது வார்டு பகுதியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பத்திலுள்ள 12 உறுப்பினர்களை இணைத்து பேட்டை சுண்ணாம்புக்காரத் தெரு மகளிர் சுய உதவிக்குழு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.



சுய உதவிக்குழு தொடங்கிய சூழ்நிலையில் குழு உறுப்பினர்கள் 3 நபர்கள் சுண்ணாம்பு தயாரிக்கும் பணி செய்து வந்தனர். மீதமுள்ள நபர்கள் பொருளாதார சூழ்நிலையில் பின்தங்கியிருந்தனர். திட்ட வழிகாட்டுதலின்படி, இக்குழுவிற்கு வங்கிக்கடன் இணைப்பாக ரூ.64,000/- தொகை வழங்கப்பட்டது. மேற்கண்ட கடன் இணைப்பின் மூலம் தொழிலை சிறப்பாக நடத்தி வங்கிக் கடனை திருப்பி செலுத்தி, இதுவரை 6 முறை வங்கி நிதி இணைப்பு பெற்றுள்ளனர்.

இறுதியாக பெற்ற வங்கிக் கடன் உதவியிலிருந்து ரூ.5,94,000/- கடன் உதவிப் பெற்று 7 உறுப்பினர்கள் சுண்ணாம்பு சூளை வைத்து சுண்ணாம்பு தயாரித்தல் தொழிலையும் மற்றும் மீதமுள்ள 5 நபர்கள் சொந்தமாக லாரி பாகம், கட்டுமான தொழில், உணவகம் போன்ற சொந்த தொழில் செய்து, ஒவ்வொரு நபரும் மாதம் ஒன்றிற்கு ரூ.10,000/- வருமானம் ஈட்டி தங்களது குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர்.



தங்களின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்து தொடர்ந்து வழிகாட்டி வரும்தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு பேட்டை சுண்ணாம்புக்காரத் தெரு மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்திய இயக்கம்

ஈரோடு மாவட்டம், சலங்கபாளையம் பேரூராட்சியில் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ஜெயம் மகளிர் சுய உதவிக் குழுவினை 12 நபர்கள் இணைந்து துவக்கினர். ஆரம்பத்தில் கூலிவேலை செய்து சேமிப்பு செலுத்தி வந்த இக்குழுவின் உறுப்பினர்கள், வங்கியில் 1 இலட்சம் ரூபாய் மற்றும் 3 இலட்சம் ரூபாய் என இரண்டு முறை கடனும், வட்டி மானியமும் பெற்று கடனை திரும்ப செலுத்தியுள்ளனர்.

தற்போது,தமிழ்நாடுநகர்ப்புரவாழ்வாதாரஇயக்கத்தின்வழிகாட்டுதலில் 5 இலட்சம் ரூபாய் கடன் பெற்று, குழுவின் 6 நபர்கள் இணைந்து ஸ்ரீரெயின்போ டிரேடர்ஸ் என்ற பெயரில், நிலக்கடலைப்பருப்பு வாங்கி மரச்செக்கு போட்டு எண்ணை ஆட்டி விற்பனை செய்து வருகின்றனர். மேலும் நாட்டுச் சர்க்கரை, குளியல் சோப்பு என சுய உதவிக் குழு மகளிர் தயாரித்து விற்கும் பொருட்களை வாங்கியும் விற்பனை செய்து வருகின்றனர். இத்தகைய தொழில் நடவடிக்கையால் தற்போது ஜெயம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்க்கை மேலோங்கி நிற்கிறது. தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வட்டி மானியத்துடன் கடன் பெற்றுத் தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு ஜெயம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்களது நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றனர்.



# நிலா மகளிர் சுய உதவிக் குழுவின் வெற்றிப் பயணம்

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகராட்சி, குஞ்சிதபாதபுரம் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் 12 நபர்களை ஒருங்கிணைத்து நிலா மகளிர் சுய உதவிக் குழு துவக்கப்பட்டது.

இக்குழுவிற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திலிருந்து ரூ.10,000/- சுழல் நிதியாக வழங்கப்பட்டது. மேலும் முதல் கடன் இணைப்பாக ரூ.1,08,000/-மும், இரண்டாம் கடன் இணைப்பாக ரூ.1,68,000/-மும் மற்றும் மூன்றாம் கடன் இணைப்பாக ரூ.4,18,000/-மும் வழங்கப்பட்டது.

எவ்வித வருமானமுமின்றி குடும்ப செலவு மற்றும் குழந்தைகளின் கல்வி செலவினங்களை மேற்கொள்ள இயலாத ஏழ்மையில் நிலையில் வாழ்ந்து வந்தவர்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக குழுவில் சேர்ந்த பின்பு குழுவில் உள்கடன் பெற்றும் அதனை வைத்து குடும்ப செலவினை மேற்கொண்டனர். மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி வருமானம் ஈட்ட கூடிய தொழில் துவங்கலாம் என திட்டமிட்டு குழுவில் உள்ள 8 நபர்கள் இணைந்து குழுவாக தொழில் புரியலாம் என முடிவு எடுத்தனர். ஜெயங்கொண்டம் நகராட்சியை சுற்றியுள்ள கிராம பகுதியில் எள், மணிலா விளைவிக்கப்படுவதை அறிந்து கொண்ட இவர்கள், எள், மணிலா விளைவிக்கும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து விற்பனை செய்யலாம் என திட்டமிட்டு, அதன்படி, உறுப்பினர்கள் 8 பேரும் தலா ரூ.15000/-வீதம் முதலீடு செய்து விவசாயிகளிடமிருந்து 1 கிலோ எள்ளினை ரூ.140/-க்கும், 1 கிலோ மணிலாவினை ரூ.90/-க்கும் கொள்முதல் செய்து, அதனை சுத்தம் செய்து, தரம் பிரித்து ½ கிலோ, 1 கிலோ என பாக்கெட் செய்து ஒரு கிலோ எள்ளினை ரூ.160/-க்கும், ஒரு கிலோ மணிலாவினை ரூ.120/-க்கும் விற்பனை செய்து வருகின்றனர்.

மேலும், தற்போது ஆயில் மில்லில் மணிலா மற்றும் எள்ளை கொண்டு சென்று எண்ணெய்யாக தயார் செய்து அதை ½ லிட்டர் மற்றும் 1 லிட்டர் என பாட்டிலில் அடைத்து கடலை எண்ணெய் ரூ.220/-க்கும், நல்லெண்ணெய் ரூ.330/-க்கும் விற்பனை செய்வதுடன், நகர்ப்புர வாழ்வாதார மையத்திலும் மற்றும் சிறு கடைகளிலும் விற்பனை செய்து வருகின்றனர்.தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நடத்தப்படும் மாவட்ட மற்றும் மாநில அளவிலான விற்பனை கண்காட்சியில் கலந்து கொண்டும் விற்பனை செய்து வருகின்றனர்.

நாளொன்றுக்கு சராசரியாக மணிலா 15 கிலோவும், எள் 7 கிலோவும், கடலை எண்ணெய் 20 லிட்டர் மற்றும் நல்லெண்ணெய் 15 லிட்டரும் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த விற்பனையின் மூலம் இக்குழுவின் உறுப்பினர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.3200/-வரை வருமானம் கிடைக்கிறது. இந்த லாபத்திலிருந்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.400/- வருமானம் கிடைக்கின்றது. இந்தத் தொகை குழுவில் பெறப்பட்ட கடனை திரும்ப செலுத்துவதற்கும், குழு உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் உறுதுணையாக உள்ளது. தங்கள் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு நிலா மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.





# புரட்சிப் பெண்கள்
# சுய உதவிக்குழுவின் கூட்டுத்தொழில்

நாகப்பட்டினம் நகராட்சி, நாகூர், சம்பாத்தோட்டம் பகுதியில் வசித்து வரும் 12 பெண்கள் ஒருங்கிணைந்து "புரட்சிப் பெண்கள் மகளிர் சுய உதவிக்குழு" என்ற பெயரில் மகளிர் குழுவினை துவங்கி நடத்தி வருகின்றனர். இக்குழுவில் உள்ள 5 உறுப்பினர்கள் மீன் வியாபாரமும், 5 உறுப்பினர்கள் தையல் தொழிலும் செய்து வருகின்றனர். இக்குழுவானது பூமகள் பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயல்பட்டு வருகிறது.

இக்குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்கள் அனைவரும் தொழில் செய்து வரும் நிலையில் தாங்களும் ஏதேனும் ஒரு தொழில் செய்ய வேண்டும் என முடிவெடுத்த குழுவின் ஊக்குநர் அம்பிகாவும், உறுப்பினரான திருமதி. ராதிகாவும் தாங்களும் ஏதாவது தொழில் செய்தால் குழுவின் சேமிப்பு மற்றும் கடன் தொகையினை தாங்களே செலுத்தி விடலாம். தங்களது கணவரை எதிர்பார்க்க வேண்டிய சூழல் மாறும் என எதிர்பார்த்து, இவர்கள் இருவரும் தங்களுக்குள் ஆலோசித்து சம்பாத்தோட்டம் பகுதியில் பேன்சி ஸ்டோர் துவங்கினால், நம்மால் எளிதில் நிர்வகிக்க முடியும் என முடிவெடுத்து, கடை ஒன்றினை வாடகைக்கு பிடித்து, சென்னையில் பேன்சி பொருட்கள் விலை குறைவாக கிடைக்கும் இடத்திலிருந்து பேன்சி பொருட்களை கொள்முதல் செய்ய முடிவெடுத்தனர்.

இதற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் SEP-BL திட்டத்தில் குழுவிற்கு கிடைத்த ரூ.5,50,000/-த்தில் அம்பிகா ரூ.50,000/-மும், ராதிகா ரூ.50,000/-மும் கடன் பெற்று சென்னையில் பேன்சி பொருட்கள் கொள்முதல் செய்து 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் "A.R. Fancy Store" (A for Ambika, R for Radhika) என்ற பெயரில் பேன்ஸி ஸ்டோர் துவங்கினர்.

நாகூர் சம்பாத்தோட்டம் பகுதி சுற்றுலா பகுதி என்பதால் வியாபாரம் நல்ல முறையில் நடக்க துவங்கியது. இவர்கள் சுழற்சி முறையில் கடையினை நிர்வாகம் செய்து வந்தனர். இச்சூழலில் அருகில் உள்ள கடையினையும் வாடகைக்கு பிடித்து, ஒரு ஜவுளிக்கடையும் நடத்தலாமே என யோசித்தனர். பின்னர் 2022 அக்டோபர் மாதம் ஜவுளிக்கடை துவங்க அம்பிகா ரூ.25,000/-மும், ராதிகா ரூ.20,000/-மும் குழுவில் உள்கடனாக பெற்று ஈரோட்டில் ஜவுளி கொள்முதல் செய்து ஜவுளிக்கடையை துவங்கினர்.

தீபாவளிக்கு முன்பு ஜவுளிக்கடை துவங்கியதால் நல்ல வருமானமும் இவர்களுக்கு கிடைத்துள்ளது. கூடுதல் மூலதனத்திற்கு பூமகள் பகுதி அளவிலான கூட்டமைப்பின் உதவியினை நாடினர். அப்போது கூட்டமைப்பு பெருங்கடனுக்கு (Bulk Loan) விண்ணப்பித்துள்ளதாகவும், பெருங்கடன் கிடைத்தவுடன் நிச்சயம் தங்களுக்கான தொழில் கடனுதவி கிடைக்கும் என நம்பிக்கையூட்டியுள்ளனர். அதுபோல் பெருங்கடனில் தலா ரூ.34,000/- வீதம் இருவருக்கும் ரூ.68,000/-ம் கிடைத்தது. இதனை வைத்து தொழிலில் கூடுதலாக முதலீடு செய்து மாதம் ரூ.20,000/- முதல் ரூ.30,000/- வரை அம்பிகாவும், ராதிகவும் வருமானம் ஈட்டி வருகின்றனர்.

தங்களின் கல்வித்தகுதி குறைவு என்ற போதிலும், ஈரோடு மற்றும் சென்னைக்கு தாங்களே நேரடியாக சென்று தங்கள் தொழிலுக்கு தேவையான பொருள்களை கொள்முதல் செய்து வருவதாக தெளிவுடனும், நம்பிக்கையுடனும் கூறும் அவர்கள், தங்களுக்கு வழிகாட்டி வரும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு தாங்கள் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளோம் என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.



சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட **முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் **ஆதரவை தாருங்கள்!**







முற்றத்திற்கு சந்தா **செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை **Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**

அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

# தொழில் தொடங்க, இணை மானிய நிதி வழி தந்தது!

எனது பெயர் பாண்டீஸ்வரி. நான் இராமநாதபுரம் மாவட்டம் இராஜசிங்கமங்கலம் வட்டாரம், சனவேலி ஊராட்சியில் வசித்து வருகின்றேன். எனக்கு திருமணமாகி 12 வருடங்கள் ஆகின்றது. எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருக்கின்றார்கள். எனது கணவர் ஸ்டுடியோ ஒன்றில் கூலிக்கு வேலை பார்த்து வருகின்றார். நானும் வேலைக்கு சென்று அதில் கிடைக்கும் வருமானத்தில் குடும்ப செலவை பார்த்து வருவேன்.

அந்த வருமானம் எனது குடும்பத்திற்கு போதுமானதாக இல்லை. மேலும் நான் அன்னை தெரசா சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருக்கின்றேன். அதனால் என்னுடைய தேவைக்கு பணம் தேவைப்படும் பொழுது மகளிர் சுய உதவிக் குழுவிலிருந்து கடனுதவி பெற்று குடும்பத்தை நடத்தி வந்தேன். கடந்த ஆண்டு சுய உதவிக் குழுவில் இருந்து உள் கடனாக ரூபாய் 10,000/- பெற்று கடனை திரும்ப செலுத்தியுள்ளேன். இந்நிலையில் தான், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் சிறு தொழில் செய்வோருக்கு இணை மானிய திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்படுவதாக தெரிய வந்தது.

இந்த செய்தியை என் கணவரிடம் தெரிவித்தபோது அவர் புதிய ஸ்டுடியோ ஆரம்பிக்கத் தேவையான தொகையை கடனாகப் பெற விண்ணப்பிக்குமாறு என்னிடம் கூறினார். அதையடுத்து நானும் புதிய தொழில் தொடங்க மூலதனத்திற்காக இணை மானிய திட்டத்தின் கீழ் கடனுதவி பெற விண்ணப்பம் செய்தேன். எனது விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டு எனது தொழிலை மேம்படுத்திக் கொள்ள TNRTP திட்டத்தின் இணை மானிய திட்டத்தின் கீழ் நுண் தொழில் நிறுவன நிதிக்கடன் பயனாளியாக, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான தேர்வு குழு என்னை தேர்வு செய்தார்கள்.

அதன் மூலம் எனக்கு இணை மானிய நிதிக் கடனாக ரூ.3,00,000/- வழங்கினர். அதில் எனக்கான மானியத் தொகை ரூ.90,000/- ஆகும். இதன் மூலம் எங்களுடைய கடன் சுமை குறைந்து நல்ல வருவாயுடன் ஸ்டுடியோ தொழில் வளர்ந்து வருகிறது.

என்னைப் போன்ற ஏழைகளுக்கு கடனுதவி வழங்கி எங்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்து வரும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- பாண்டீஸ்வரி



# உடற்பயிற்சி தொழில் நுணுக்கம் கற்றேன், சுயமாக உடற்பயிற்சி நிலையம் நடத்துகிறேன்!

எனது பெயர் வித்யா (வயது 26). திருப்பூர் மாவட்டம், ஈட்டிவீராம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட கருக்கங்காட்டு புதூர் பகுதியில் வசித்து வரும் நான், இளங்கலை அறிவியல் (கணிதம்) படித்துள்ளேன். எனது கனவர் பெருமாநல்லூர் பகுதியில் ஆண்களுக்கான உடற்பயிற்சி நிலையம் தொடங்கி நடத்தி வருகிறார். எங்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. நான் இதற்கு முன்பு குடும்பத் தலைவியாக இருந்து குடும்ப பொறுப்புகளை கவனித்து வந்தேன். நாளடைவில் உடற்பயிற்சி செய்வதில் நாட்டம் அதிகரித்தது அதன் காரணமாகவும் எனது கணவரின் தூண்டுதல் காரணமாகவும் முழுமையாக உடற்பயிற்சி முறைகளைக் கற்று, எனது கணவரின் உடற்பயிற்சி நிலையத்திலேயே பணியில் சேர்ந்து மாதம் ரூபாய் 8000/- வரை வருமானம் பெற்று வந்தேன்.

பணியில் இருந்து கொண்டே நாம் ஏன் தனியாக உடற்பயிற்சி நிலையம் தொடங்கக் கூடாது என யோசித்து எனது கணவரிடம் எனது விருப்பத்தை தெரிவித்தேன். ஆனால் போதிய நிதியின்மை காரணமாக சுய தொழில் தொடங்க முடியாத நிலையிலிருந்தேன். நான் எங்கள் பகுதியில் செயல்படும் காமராஜர் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினராக இருப்பதனால், மகளிர் குழு கூட்டங்களுக்கு செல்லும் பொழுது தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் பற்றியும், திட்டத்தின் மூலமாக வழங்கப்படும் மானியத்துடன் கூடிய தொழில் கடன் குறித்து அறிந்து கொண்டு எங்களது ஊராட்சியிலுள்ள தொழில்சார் சமூக வல்லுநரின் மூலமாக TNRTP திட்ட அலுவலர்களை அணுகி தேவையான விவரங்களைத் தெரிந்து கொண்டு இணை மானிய நிதித் திட்டத்தில் கடனுதவிக்கு விண்ணப்பித்தேன்.

மிகக் குறைந்த காலத்திற்குள்ளாக எவ்விதமான அலைச்சலுமின்றி தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் வாயிலாக தொழில் திட்டம் தயாரித்து வழங்கியதுடன், நிறுவனத்திற்கு வேண்டிய உதயம் சான்றும் பெற்றுத் தந்து, இணை மானிய நிதிக் கடனாக ரூ. 5,68,020/- வழங்கினர்.

இந்த நிதியில் உடற்பயிற்சி நிலையத்திற்கு வேண்டிய இயந்திரங்களை வாங்கி, வாவிபாளையத்தில் கலாம் உடற்பயிற்சி நிலையம் என்ற பெயரில் நிறுவனம் தொடங்கி நடத்தி வருகிறேன். தற்பொழுது எனது பயிற்சி நிலையத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 80 முதல் 100 உறுப்பினர்கள் வரை பயின்று வருகின்றனர். அதன் வாயிலாக ரூ. 25,000/- முதல் ரூ. 35,000/- வரை வருவாய் ஈட்டி வருகிறேன்.

தற்பொழுது எனது நிறுவனத்தில் பகுதி நேரமாக 5 நபர்கள் வரை பணியாற்றுகின்றனர். நாளடைவில் உறுப்பினர்கள் எண்ணிக்கையும் வருமானமும் அதற்கேற்றவாறு பணியாளர்களின் எண்ணிக்கையும் உயரும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கூலிக்கு வேலை செய்த காலம் போய் தற்பொழுது நான் 5 நபர்களுக்கு ஊதியம் வழங்கும் முதலாளியாக உயர்ந்ததை மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். இந்த வாய்ப்பினை வழங்கி எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்த TNRTP திட்டத்திற்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- பா. வித்யா





# செழிப்பான மிளகாய் உற்பத்திக்கு, தரமான பண்ணைப் பயிற்சி பசுமை சேர்த்தது!

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி வட்டாரத்திலுள்ள பனைக்குளம் ஊராட்சியில் நாங்கள் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக வசித்து வருகிறோம். எங்கள் ஊராட்சியில் பிரதானமான மக்கள் விவசாயத் தொழிலை மட்டுமே நம்பி இருந்து வருகிறோம். இந்த விவசாய தொழில் மூலமாக வரும் வருமானத்தை வைத்துத்தான் எங்கள் குடும்பத்தின் தேவைகளை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் நவீன மயமாக்கலின் காரணமாக விவசாயத்தின் முழு பலனையும் அடைவதில் நாங்கள் மிகவும் பின்னடைவை சந்தித்து வருகிறோம் என்பது மறுக்கப்படாத உண்மையாக இருந்து வருகிறது. எங்களது ஊராட்சியில் விவசாயிகளை ஒன்றிணைத்துநாங்கள் ஓர் விவசாய உற்பத்தியாளர் குழுவை உருவாக்கியுள்ளோம். மேலும் எங்கள் ஊராட்சியில் அதிகமாக பயிரிடப்படும் பயிராக மிளகாய் உள்ளது.

எங்கள் ஊரின் மண் வளம் மிளகாய் பயிருக்கு ஏற்றதாக உள்ளதால் அனேகமான விவசாயிகள் இதை பயிரிடுகின்றனர். தற்போதைய அறிவியல் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மகசூலை அதிகமாக பெறுவதற்கு போதிய விழிப்புணர்வு, நவீன விவசாய கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது போன்ற வழிமுறைகளை நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை. எங்களுக்கு பண்ணைப் பயிற்சி வழங்குவதற்காக TNRTP திட்டத்தின் மூலம் எங்கள் ஊராட்சியில் உள்ள விவசாய உற்பத்தியாளர் குழுவில் இருந்து 30 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு சமுதாயப் பண்ணைப் பள்ளி (CFS) உருவாக்கப்பட்டது.

எங்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக பண்ணைப் பள்ளி பயிற்றுநராக திருமதி. ரோஸ்லின் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் விவசாயம் சார்ந்து பல பயிற்சிகளை ஏற்கனவே பெற்றிருந்த நிலையில் மிளகாய் உற்பத்தியில் கைதேர்ந்த வல்லுநராக இருந்து வந்ததால் அவர் வழியாக எங்களுக்கு பண்ணைப் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியில் எங்களுக்கு எவ்வாறு மிளகாய் பயிரிடுவது, மண் வளத்தை மேம்படுத்துதல், பயிர் ஊக்கிகளைத் தேர்ந்தெடுத்தல், நவீன விவசாய கருவிகளைப் பயன்படுத்துதல் போன்ற அனைத்து விதமான பயிற்சிகளும் அந்த சமுதாயப் பண்ணைப் பள்ளியில் எங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

நாங்கள் பண்ணைப் பயிற்சியை எடுத்துக் கொண்டதன் பயனாக தற்போது மிளகாய் உற்பத்தியில் மிகச் சிறந்து விளங்குகிறோம். விவசாயம் பற்றி அறிந்தும் அதனை முறையாக செய்யாமல் சரியான மகசூலை பெற முடியாமல் இருந்த எங்களுக்கு விவசாயத்தின் அனைத்து உத்திகளையும் கற்றுத்தந்து தற்போது அதிக மகசூலை ஈட்டி வருகிறோம். எங்கள் ஊராட்சியில் சமுதாயப் பண்ணைப் பள்ளியை அமைத்து விவசாயத்தின் முழு பலனையும் பெறுவதற்கு மிகவும் உதவியாக இருந்த தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்திற்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

\- விவசாய உற்பத்தியாளர் குழு
பனைக்குளம் ஊராட்சி,
திருப்புல்லாணி, இராமநாதபுரம்





# கொண்டைக்கடலை பிரியாணி

கொண்டைக்கடலையில் புரதச்சத்து, நார்ச்சத்து, மாவுச்சத்து போன்ற உடலுக்கு நன்மை தரக்கூடிய பல சத்துக்கள் அடங்கியுள்ளன. இந்த கொண்டைக்கடலையை வைத்து நீங்கள் பிரியாணி செய்திருக்கிறீர்களா? வாருங்கள் அருமையான கொண்டைக்கடலை பிரியாணி செய்வது எப்படி? என்று இப்பதிவில் பார்ப்போம்.

**தேவையான பொருட்கள்:**

அரிசி - 1 டம்ளர், கொண்டைக்கடலை- 1/2 டம்ளர், எண்ணெய் - 50 மில்லி, வெங்காயம், தக்காளி மற்றும் பச்சை மிளகாய் - தலா 3, இஞ்சி பூண்டு விழுது- 1 ஸ்பூன், மிளகு தூள் - 1/2 ஸ்பூன், சீரகத்தூள் - 1/2 ஸ்பூன், மஞ்சள் தூள் - 1/4 ஸ்பூன், மிளகாய் தூள் - 1/2 ஸ்பூன் (காரத்திற்கு ஏற்றவாறு), தயிர் - 2 ஸ்பூன், நெய் - 1 ஸ்பூன், கொத்தமல்லி, புதினா - தேவையான அளவு



**பிரியாணி மசாலா செய்ய தேவையான பொருட்கள்:**

பட்டை - 1, பிரிஞ்சி இலை - 1, ஏலக்காய் - 2, கிராம்பு - 3, சோம்பு - 1 ஸ்பூன், கசகசா - 1/2 ஸ்பூன், அன்னாசி பூ - 3 - இவை அனைத்தையும் ஒரு மிக்சி ஜாரில் போட்டு அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

**செய்முறை**

முதலில் அரிசி மற்றும் கொண்டைக்கடலையை தனித்தனியாக நன்றாக கழுவி விட்டு 20 நிமிடம் ஊற வைத்து எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு ஊற வைத்த கொண்டைக் கடலையை கழுவி எடுத்து கொள்ளுங்கள். பிறகு அடுப்பை பற்ற வைத்து, அதில் ஒரு கடாயினை வைத்து, அதில் எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் காய்ந்ததும் அதில் அரைத்து வைத்த பிரியாணி மசாலாவை சேர்த்து கொள்ளுங்கள். பிறகு அதில் வெங்காயம் சேர்த்து அது பொன் நிறமாக வரும் வரை வதக்கி கொள்ளவும்.

வெங்காயம் வதங்கியதும் அதனுடன் இஞ்சி பூண்டு விழுது சேர்த்து வதக்கவும். பிறகு தக்காளி மற்றும் பச்சை மிளகாய் இரண்டையும் சேர்த்து நன்றாக வதக்கவும். அதனுடன் மஞ்சள் தூள், மிளகாய் தூள், சீரகத்தூள், மிளகுத்தூள் போன்றவற்றை போட்டு நன்றாக கலந்து விடவும். பிறகு அதனுடன் தயிர், கொத்தமல்லி, புதினா இவற்றை சேர்த்து கொள்ளவும். அதனுடன் சிறிதளவு நெய் சேர்த்து நன்றாக கலந்து விடவும்.

பிறகு ஊற வைத்த கொண்டைக் கடலையை மசாலாவுடன் நன்றாக கலந்து விடவும். 3 டம்ளர் தண்ணீர் ஊற்றி அதில் தேவையான அளவு உப்பு சேர்த்து மூடிவைத்து கொதிக்க விட வேண்டும். அடுப்பில் உள்ள பொருட்கள் கொதித்ததும் அதில் ஊறவைத்த அரிசியை சேர்த்து கிளறிவிடவும். பிறகு மூடிவைத்து 10 நிமிடம் கொதிக்க வைக்க வேண்டும். 10 நிமிடம் கழித்து அடுப்பை சிம்மில் வைத்து தம் கட்டி 10 நிமிடம் கழித்து இறக்கினால் போதும் அருமையான கொண்டைக்கடலை பிரியாணி ரெடி.

## பயனுள்ள சிறு குறிப்புகள்

- துணி துவைக்கும் பொழுது அதில் சுருக்கம் இல்லாமல் இருப்பதற்கு நீங்கள் அலசி முடித்த பின்பு கடைசியாக ஒரு முறை நாலைந்து சொட்டுகள் கிளிசரின் சேர்த்து அலசிப் பாருங்கள் சுருக்கம் மறையும்.

- துணி காயப்போட நைலான் கயிறை வாங்குகிறீர்கள் என்றால் நீங்கள் வாங்கியவுடன் முதலில் கொஞ்சம் சோப்பு நீரில் ஊற வைத்துக் கொள்ளுங்கள். அதன் பின்பு அலசி பயன்படுத்திப் பாருங்கள், நீண்ட நாட்கள் அறுந்து போகாமல் உழைக்கும்.

- எண்ணெய் பாட்டிலை கையாளும் பொழுது திடீரென கை தவறி எண்ணெய் கீழே சிந்திவிட்டால் உடனே யோசிக்காமல் அதன் மீது கோலப் பொடியை தூவி விடுங்கள். பிறகு துடைத்துப் பாருங்கள், கொஞ்சம் கூட எண்ணெய் பசை இல்லாமல் அழகாக வந்து விடும்.

- மிக்ஸி கிரைண்டர் போன்ற உபகரணங்களை சுத்தம் செய்யும் பொழுது பழைய டூத் பிரஷில், டூத் பேஸ்ட் கொஞ்சமாக வைத்து தேய்த்து கழுவி பாருங்கள், புதியது போல பளிச்சென இருக்கும்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by B. RAJKUMAR, RASI GRAPHICS PRIVATE LTD, 40.Peters Road, Royapettah, Chennai - 600014. Published from (1,20,000 Copies Circulated)Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.


இயந்திரமும்,
உருவாக்கலும்...
எங்கள் கைகளால்
சாத்தியமாகிறது!
எங்கள் லேத் தொழிற் பட்டறையில்:
• இரண்டு லேத் இயந்திரங்கள்
• ஒரு டிரில்லிங் இயந்திரம்
• ஒரு டிரில் டாப் இயந்திரம் உள்ளது
வாடிக்கையாளர்களுக்கு:
• இயந்திர உள்கரணங்கள் (இயந்திர உள் பாகங்கள்)
• மோட்டார் பாகங்கள்
• இயந்திரவியல் பணிகள் செய்து கொடுக்கப்படும்
பெயர்: S.யுவராணி
ஊராட்சி: கள்ளிப்பாளையம்
வட்டாரம்: SS குளம்
மாவட்டம்: கோயம்புத்தூர்
தொடர்புக்கு:
9942873684
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
5வது தளம், திருவிக தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு
(044) 434 43200 tnrtpstate@gmail.com www.vkp-tnrtp.org VKPTNRTP VKP_TNRTP VKP_TNRTP

RNI NO .TNTAM/1999/02733 - TAMIL NADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS.1569 / 2023
Reg.No. TN/CH/(C)/455/2024-2026 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2024-2026
Date of Publication : 1st Week of the every month Posted between 8th – 14th June 2024 Posted at Patrika Channel, Egmore.

TNULM
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
*Empowering Lives*

மீனை சுத்தம் செய்து தர வேலையை செய்யுறோம்.
இதுல வர வருமானத்துல தான் வாழுறோம்.

TNULM மூலமா சுத்த செஞ்ச மீன் கழிவுகள் பயன்படுத்தி மீன் அமிலம் தயாரிச்சா கூடுதல் வருமானம் வரும்ணு சொன்னங்க. நாங்களும் பயிற்சி மூலம் தெரிஞ்சிகிட்டு மீன் அமிலம் தயாரிச்சிட்டு இருக்கோம்.

இப்ப சந்தை வாய்ப்பை உருவாக்க முயற்சி செஞ்சிட்டு இருக்கோம்.



"உன்னையே நீ நம்பு ஒரு நாள் உயர்வு நிச்சயம்"